மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மலர்மன்னனுக்கு மட்டும் இந்த சபை அல்ல. 7, 8 உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். நீங்கள் அமருங்கள். மரபைக் காப்பாற்றுங்கள். கொஞ்சம் அவை அடக்கத்தோடு இருங்கள்.

தஞ்சை மாவட்டத்தில் புயல் எச்சரிக்கைக் கருவிகள்.

740—(*வினா எண் 7881) திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் புயல் எச்சரிக்கைக் கருவிகள் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) எங்கெங்கு எத்தனை நிறுவப்பட உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் 11 புயல் எச்சரிக்கைக் கருவிகள் கீழ்க்கண்ட இடங்களில் நிறுவப்பட்டுள்ளன :—

1. சீர்காழி.
2. தஞ்சாவூர்.
3. மயிலாடுதுறை.
4. நன்னிலம்.
5. நாகப்பட்டினம்.
6. திருத்துறைப்பூண்டி.
7. வேதாரணியம்.
8. பட்டுக்கோட்டை.
9. அதிராமபட்டினம்.
10. பொறையார்.
11. மல்லிப்பட்டினம்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை போன்ற பல்வேறு இடங்களில் புயல் எச்சரிக்கைக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன என்று சொல்லியிருக்கிறார். ஆண்டுதோறும் வழக்கமாக தஞ்சையிலே புயல் அடிக்கின்ற நேரங்களில் ஒரத்தநாடு தாலுக்காவில் அதிகமாக சேதம் ஏற்படுகிறது. எனவே, மத்தியப் பகுதியான ஒரத்தநாட்டில் ஒரு புயல் எச்சரிக்கைக் கருவி அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1986 மே 14]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய செயற்குறிப்பு இல்லை. அதுபற்றி தனியாகத்தான் ஆராயவேண்டும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் புயல் எச்சரிக்கைக் கருவிகள் 11 இடங்களில் அமைக்கப்போவதாக அறிவித்து இருக்கிறார்கள். நன்றி சொல்வதோடு அந்த வேலைகள் இந்த ஆண்டே துவக்கப்படுமா அல்லது எப்போது இந்த வேலைகள் துவக்கப்படும் என்று அறிவதோடு, திருத்துறைப் பூண்டி என்று சொல்கின்றபோது கடலோரப் பகுதியாக இருக்கக் கூடிய தொண்டைக்காடு, முத்துப்பேட்டை பகுதியா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11 இடங்களில் இந்தப் புயல் எச்சரிக்கைக் கருவி அமைப்பதற்கான செயற்குறிப்பை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. சில முக்கிய பாகங்கள் கிடைக்காத காரணத்தினால் வேலை தொடங்கப்படவில்லை. மற்ற வேலைகள் தொடங்கப் பட்டாலும் இந்தக் கருவிகள் வைப்பதிலே சில இடற்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. விரைவிலேயே முயற்சிகள் மேற்கொள்ளப் படும். திருத்துறைப்பூண்டி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த இடம் என்று திட்டவட்டமாக தெரிவிக்கப்படவில்லை. தனிக் கேள்வி போட்டால் அந்த இடத்தைக் குறிப்பிடலாம்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் 11 இடங்களில் புயல் எச்சரிக்கைக் கருவிகள் நிறுவப்பட்டுள்ள தாகச் சொன்னார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் கடலோரப் பகுதியில் புயல் எச்சரிக்கைக் கருவி அமைப்பதற்கு செயற் குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அமைக் கப்படுகின்ற 11 இடங்களைச் சேர்த்து மொத்தம் 44 இடங்களில் இந்தப் புயல் எச்சரிக்கைக் கருவிகள் அமைக்கப்படுகின்றன.

(முற்பகல் 9-10)

ஏற்கெனவே அமைந்திருப்பது 33 இடங்களில். அந்த வகையில் தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மரக்காணம், கடலூர், வானூர், சிதம்பரம், போர்ட்னோவோ, திண்டிவனம், நெய்வேலி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருக் கின்றன.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடலோரப் பகுதிகளில் புயல் பாதுகாப்பு எச்சரிக்கை கருவிகள் அமைக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் திருப்பாலைவனம், பொன்னேரி, சைதாப்பேட்டை, ஸ்ரீபெரும்புதூர், செங்கற்பட்டு, காஞ்சீபுரம், மதுராந்தகம், சென்னை, கல்பாக்கம் ஆகிய இடங்களில் இந்தப் புயல் எச்சரிக்கைக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

கிராமப் பணியாளர்கள்.

741—*(வினா எண். *8333*) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப் பணியாளர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கிராம ஊழியர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசீலித்துப் பார்த்து, இப்போது இருந்து வரும் நிலையையே நீடிக்க விடலாம் என்றும் மாற்றம் அவசியம் இல்லையென்றும் முடிவு செய்துள்ளது.

திரு. மு. இராசாங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பணியாளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் கிராமங்களின் அன்றாட நடவடிக்கைகளிலே தொடர்பு கொண்டு இருப்பவர்கள். சொல்லப் போனால் முழு நேரமும் பணியாற்றுபவர்கள். அவர்களை அரசினுடைய நிரந்தர ஊழியர்களாக ஆக்கி, ஊதியத்தையும் அதிகப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்தக் கிராமக் காவலர், கிராமப் பணியாளர் மற்றும் பாசனக் காவலர்கள் என்றமுறையில் வருகிற இந்தக் கிராம ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பகுதி நேர ஊழியர்களாக இருப்பவர்கள். அவர்கள் 31,572 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு சிறப்பு மதிப்பூதியமாக ரூ. 300 திங்கள் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அவர்களை